# எழுப்புதல் தொனி

EZHUPUTHAL THONI

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-

Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-



# கர்த்தருக்குக் காத்திருங்கள்!

மலர்: 18 | Volume: 18    அக்டோபர் 2022 | October 2022    இதழ்: 10 | Issue: 10



பெண்கள் கூடுகையில் செய்தியளிக்கும் சகோதரி கிறிஸ்டி ஞானசேகர், லம்டாபுட் சபை - ஒடிசா.



சுவிசேஷ பணியில் நமது சுவிசேஷ குழுவினர், ஒடிசா மாநிலம்.



# உங்கள் சகோதரனிடமிருந்து...



**இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்!**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, நீங்கள் சுகமாயிருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். இந்த மாதமும் பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

உங்கள் ஜெபத்தின் பலனாக கர்த்தர் என்னை கொண்டு செல்லும் இடமெல்லாம் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள். தேசத்தின் நிகழ்வுகளை பார்க்கும் பொழுது பொருளாதாரத்திலே பின்னடைவு உண்டாயிருக்கிறது. அதுமாத்திரமல்ல, தேசத்திலே பஞ்சம் உண்டாயிருக்கும். தேசத்தின் குடிகள் கலக்கமடைவார்கள். ஆகவே உங்கள் ஜெபங்களில் நம்முடைய தேசத்தின் ஜனங்கள் செய்து வரும் பாவங்களினிமித்தம் தேவனுடைய கோபம் தேசத்தின் மீது வராதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்.

நமது ஒடிசா மாநில பணித்தளத்திலே, திரள் மக்களை ஒரே இடத்திலே கூட்டிச் சேர்த்து தேசத்திற்காக புலம்பி ஜெபிக்க விசாலமான நிலத்தை கர்த்தருக்கென்று வாங்கும்படியான பணிகள் நடந்து வருகிறது. சுமார் ஏழு இடங்களில் ஆலய கட்டுமானப்பணி நடந்து கொண்டிருக்கிறது. மழையையும் பொருட்படுத்தாமல் நமது மிஷனெரிகள் சுவிசேஷ பணியை தீவிரமாய் செய்து வருகிறார்கள். உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்காக ஒவ்வொரு நாளும் கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபித்து வருகிறேன். தேவ கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

எழுப்புதல் பணியில்,

**(T.ஆசீர் ஞானராஜ்)**


வங்கியின் மூலமாக பணம் அனுப்பும்போது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

**96294 99532**

Follow us youtube channel:
**Asir Gnanaraj**

24 மணி நேர ஜெப உதவிக்காக:
**94869 19522, 81909 25800**
**ஊழிய விபரங்களுக்கு: 96294 99532**
Email: calvarygospelmm@gmail.com

**https://www.youtube.com/channel/UCOKkrVUWceMTwtC2dKOl4zg (or)**

# கர்த்தருக்குக் காத்திருங்கள்!



**இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் – ஏசாயா 40:30,31**

## தீர்க்கதரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

பிரியமானவர்களே, கர்த்தருக்கு காத்திருக்க கற்றுக்கொள்ளுங்கள். ஆண்டவருடைய சமூகத்திலே காத்திருக்கக் கூடிய அனுபவம் நமக்கு தேவை. தேவனிடத்தில் விண்ணப்பித்ததற்கு ஒரு பதிலை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும். காத்திருக்கிறவர்களை ஆண்டவர் நோக்கிப் பார்க்கக் கூடியவர். இந்த உலகத்திலே கிறிஸ்தவ சமுதாயமானாலும் உலகத்தாரானாலும் மக்களுடைய நிலைப்பாடு காத்திருப்பதற்கு மனமில்லை. எல்லாமே அவசரமான நிலையில் இருக்கிறது. பொறுமை, நிதானம் இதையெல்லாம் இந்நாட்களில் மக்கள் மத்தியில் பார்க்கவே முடியவில்லை. அதே போலத்தான் ஆவிக்குரியவர்களும். கையில் பணம் வந்துவிட்டால் கண்மூடித்தனமாக தன் மனதிலே என்ன தோன்றுகிறதோ அந்த நிலையில் அவர்கள் போய் ஒரு தொழிலை துவங்கி விடுகிறார்கள். பணத்தை ஏதோ ஒன்றில் முதலீடு செய்து விடுகிறார்கள். ஒரு நிலத்தை வாங்கிக் கொள்கிறார்கள். அதற்கு பின்பு உள்ள நிலைமை வேதனை, துக்கம், வருத்தம். சிலருடைய பிள்ளைகள் வாழ்க்கையில் திருமணம் என்ற ஒரு பகுதி வரும் போது பெற்றோர்கள் ஒருவருடைய வெளித்தோற்றத்தைபார்த்து ஏமாந்து கண்மூடித்தனமாக செயல்படுகிறார்கள். அதனுடைய விளைவு பிள்ளைகளுடைய வாழ்க்கை சூனியமாய் போய்விடுகிறது. கடைசி வரைக்கும் கண்ணீர். ஆண்டவர் அவருடைய ஜனங்களாகிய நமக்கு கற்றுக் கொடுக்கக் கூடிய காரியம். உலக மனிதர்களைப் போல நாம் அவசரப்பட்டு காரியங்களைச் செய்யக் கூடாது. கர்த்தருடைய பிள்ளைகள் கழுகைப்போல் எல்லாவற்றிலும் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். கழுகானது கடுமையான காற்று வீசக் கூடிய நாட்களிலே உயரமான மலையைத் தேடி அடைக்கலமாய் போய் அந்த காற்றுக்கு ஒதுக்காக எந்த திசையிலிருந்து காற்று வீசுகிறதோ அந்த காற்றுக்கு மறைவாக பாதுகாப்பான இடத்திலே போய் அமர்ந்து கொண்டு

பொறுமையாக உலகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும். இந்த புயல் எம்மாத்திரம் இது எப்படி வந்ததோ அப்படியே மறைந்து போகும் அது வரைக்கும் நான் காத்திருப்பேன் என்று தனக்குள்ளே தீர்மானித்து பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கும். அதன் முடிவு என்ன? ஒரு நாள் அந்த காற்று அமைதியாகும் போது அது இறங்கி வந்து ஆகாரத்தை எடுத்து செல்லும். அதே கழுகு வருடத்திற்கு ஒரு முறை தன்னுடைய இறகுகளையெல்லாம் உதிர்த்து புதிய சிறகுகள் அதிலே உருவாகி அதன்பின்பு அது பறந்து செல்லக்கூடியதாய் இருக்கிறது. அந்த பழைய இறகுகள் எல்லாம் உதிரத் துவங்கிய உடனே கழுகு பறக்கக்கூடிய தன்மையை இழக்கிறது. அந்தநாள் நெருங்கும் போது கழுகு பாதுகாப்பான இடத்திற்கு போய் அமர்ந்து விடும். தன்னுடைய சிறகுகளில் புதிய சிறகு வரும்போது அது தன்னுடைய சிறகுகளை அடித்து உயரே எழும்பும்.

ஒரு அருமையான கர்த்தருடைய ஊழியர் விபத்திற்குள்ளாகி **அவருடைய இரண்டு கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு படுத்த படுக்கையாய் இருந்தார். அப்பொழுது அவரை பார்க்கும்படிக்கு அவருடைய நண்பர் மிகவும் துக்கத்தோடு ஐயோ என் நண்பனுக்கு இப்படி ஆகி விட்டதே என்று பாரத்தோடு கூட அவரை பார்க்க முயற்சி செய்த போது அவருக்கு அறுவைசிகிச்சை நடக்கிறது இப்பொழுது பார்க்க முடியாது என்று சொல்லி விடுகின்றனர். அவரும் காத்திருக்கிறார். அறுவைசிகிச்சை முடிந்த போது பார்க்கலாம் என்று சொல்லி கேட்கும்பொழுது இல்;லை அவர் அவசர பிரிவில் இருக்கிறார் இப்பொழுது பார்க்க முடியாது என்று கூறுகின்றனர். அவரும் காத்துக்கொண்டேயிருக்கிறார். பல மணி நேரம் காத்திருந்து தன்னுடைய நண்பனை பார்க்க செல்கிறார். அவர் படுக்கையில் இருக்கிறார். அவர் துக்கத்தோடு இருப்பார் என்று எண்ணி பார்க்க சென்ற போது அவர் சிரித்த முகத்தோடு எப்போதும் போலவே வாருங்கள் என்று வரவேற்றார். இந்த சூழ்நிலையிலே எப்படி இவ்வளவு சந்தோஷமாக இருக்க முடியும். இரண்டு கால்களும் உடைந்து படுத்த படுக்கையான நிலையில் இருக்கிறார். எப்படி இந்த விபத்து நடந்தது நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்ற கேள்விகள் கேட்பதை விட்டு விட்டு இந்த சூழ்நிலையிலே உங்களால் எப்படி மகிழ்ச்சியாய் இருக்க முடிகிறது என்று கேட்டபோது அவரோ ஜெபக்குறைவோடு ஓடிக்கொண்டிருந்தேன். வேதத்தை திறக்காமல் ஓடிக்கொண்டிருந்தேன். ஆண்டவர் இப்பொழுது என்னை படுக்கையில் போட்டு விட்டார். ஏன் ஆண்டவரே என்று கேட்ட போது அவர் சொன்னார். உன் ஓட்டம் தாறுமாறாய் இருக்கிறது. நீ ஆயத்தப்பட வேண்டியிருக்கிறது. உன் வார்த்தையில் வல்லமை இல்லை உன்னுடைய பிரசங்கத்தில் அபிஷேகம் இல்லை. உன்னுடைய வார்த்தை வெறும் காற்றைப் போல இருக்கிறது. அது ஜனங்களுக்குள்ளே செயல்படவில்லை. உன்னை மறைத்து என்னால் ஜனங்களை ஆசீர்வதிக்க இயலவில்லை. ஆகவே நீ புதுபெலன் அடைய வேண்டும். அதனால் தான் உன் கால்களை காயப்படுத்தினேன் என்று ஆண்டவர் சொன்னதாக அவர் தன் நண்பனிடம் சொன்னார். ஒரு சில மாதங்கள் வேதாகமத்தை மகிழ்ச்சியோடு இரவும் பகலும் வாசிக்க ஆரம்பித்தார். அதன்பின்பு ஊழியத்தில் ஆண்டவர் அவரை வல்லமையாக பயன்படுத்தி பல இடங்களில் ஆலயத்தை கட்டும்படிக்கு அவர் கிருபை செய்தார்.**

*கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ வெட்கப்பட்டுப் போவதில்லை. இளைஞர்களுக்குள்ளே இருக்கிற பெலன் மாம்ச பெலன். வாலிபர்களுக்குள்ளே இருப்பது பராக்கிரமம்.* ***அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார்; வீரனுடைய கால்களில் பிரியப்படார். தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார் – சங்.147:10,11*** *விவேகத்தோடு தேவ பிள்ளைகள் நடக்க வேண்டும். திருமண காரியமானாலும் புதிதாக ஒரு காரியத்தை செய்ய வேண்டுமானாலும், நிலத்தை வாங்குவதானாலும், தொழிலைத் துவங்குவதானாலும் எதைச் செய்தாலும் கர்த்தரிடத்தில் காத்திருந்து ஆண்டவரே இது உமக்கு சித்தமா என்பதை அறிந்து அவர் செயல்படும் வரை நாம் காத்திருக்க வேண்டும்.*

**ஜெபிக்கக் கூடிய கர்த்தருடைய மனிதர் ஒருவர் தனது மகளுக்கு வரன் பார்க்கக் கூடிய வேளை வந்தது. அந்த சமயத்தில் அவர் கர்த்தருடைய வேளையை அறியாமல் அவசரப்பட்டு செயல்படத் துவங்கினார். பல இடங்களுக்கு சென்று மாப்பிள்ளை தேடினார். ஆனாலும் எதுவும் ஏற்றவிதமாய் இல்லை. ஒரு நாள் ஆண்டவர் ஒரு தரிசனத்தை அவருக்கு காண்பித்தார். அந்த தரிசனத்திலே இரண்டு காட்டுப்புறாக்கள் சேர்ந்து ஒரு சின்ன மரத்திலே கூடு கட்டத் துவங்கியது. இவர்தரிசனத்தில் பொறுமையாக பார்த்துக்கொண்டிருக்கிறார். பறவைகள் ஒவ்வொன்றாக குச்சிகளை எடுத்து பொறுமையாக கூட்டை கட்டுகிறது. நான்கு குச்சிகளை எடுத்து வைத்தால் இரண்டு குச்சிகள் கீழே விழுகிறது. இப்படியாக பொறுமையாக கூடு கட்டுகிறது. பொறுமையில்லாத இவர் வேகமாக அந்த மரத்தின் அடியில் போனார். இவர் கையில் கொஞ்சம் குச்சியை எடுத்து கூடு கட்ட முயற்சிக்கிறார். ஆனால் அது எல்லாமே கீழே விழுகிறது. அப்போது பரத்திலிருந்து ஒரு சத்தம் கேட்கிறது.** ***ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த் தன் வேளையை அறியும்; காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்; என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள். – எரே. 8:7*** **தரிசனம் கண்டு விழித்து ஜெபம் பண்ணினார். அதினதின் காரியத்தை நான் நேர்த்தியாய் செய்வேன். ஆனால் உன்னுடைய வாழ்க்கையில் பொறுமை இல்லை என்பதை**


**WANTED**

## முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய

வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 96294 99532, 94869 19522.

ஆண்டவர் அவருக்கு உணர்த்தினார். ஆண்டவருடைய தரிசனத்தினால் உணர்த்தப்பட்டவுடனே அவர் தன்னை ஒப்புக்கொடுத்தார். அப்பா இனி நீங்கள் செயல்படாமல் நான் செயல்பட மாட்டேன் என்று ஒப்புக்கொடுத்தார். நாட்கள் கடந்தது. அவருடைய மகள் மேலும் இரண்டு ஆண்டுகள் படித்தாள் படித்துமுடித்தவுடன் வேலை கிடைத்தது. ஏனென்றால் தேவனுடைய திட்டம் வேறு. அந்த பெண் வேலை செய்த பகுதியிலிருந்து தேவன் ஒரு துணையை கொண்டு வந்தார். அவர்கள் வீட்டில் வந்து பெண்ணைப் பார்த்து விட்டு போன போது நாங்கள் இதை ஆண்டவரிடம் கேட்டு சொல்லுகிறோம் என்று பெண்வீட்டார் சொல்லி விட்டார்கள். அந்த மாப்பிள்ளை வீட்டார் அவர்களிடம் இந்த வார்த்தை எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. என் சொந்தக்காரர்களிடம் கேட்கிறேன் என்று சொல்லாமல் ஆண்டவரிடத்தில் கேட்கிறேன் என்று சொன்னதை அவர்கள் விரும்பினார்கள். அந்த நாளிலே ஆண்டவரை முன்னிட்டு அவருடைய நாமத்தை உயர்த்தி தேவனுடைய சமூகத்தில் காத்திருக்கிறார்கள். ஒரு நாள் ஆனது இரண்டு நாட்கள் ஆனது பதட்டமே இல்லாமல் நல்ல மாப்பிள்ளை தான் நல்ல குடும்பம் தான் ஆண்டவர் சொன்னால் செய்யலாம் என்று காத்திருந்த போது சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் ஆண்டவர் ஒரு தரிசனத்தை காண்பித்தார். இந்த தேவ மனிதர் ஒரு தேவாலயத்திற்குள்ளே கடந்து போனார். அந்த தேவ ஆலயம் பளிங்குக்கு ஒப்பாக இருக்கிறது. முழுவதும் சூரிய வெளிச்சம் போல விளக்குகள் பிரகாசமாய் இருக்கிறது. அந்த ஆலயத்திற்குள்ளே போய் நின்றவுடன் அதன் நடுவில் கிழிந்துபோன கோணிப்பை இருக்கிறது. அந்த ஆலயத்திற்கு ஒவ்வாத கிழிந்து போன சாக்கு. அவர் சாக்கின் அருகில் போய் நின்று அங்குமிங்குமாக பார்க்கிறார். அப்பொழுது மேலேயிருந்து ஒரு வெண்மையான காகிதம் கீழே வருகிறது. அதை அவர் பார்த்த போது அதில் ஏதோ எழுதியிருந்தது. ஆனால் என்னவென்று தெரியவில்லை. மகளுக்கு வரன் சரியா என்று கேட்டால் ஏதோ ஒரு ஆலயத்திற்குள்ளே போனது போலவும் கிழிந்து போன சாக்கு இருக்கிறது மேலிருந்து ஒரு வெள்ளை காகிதம் வருகிறது என்று சிந்தித்த போது கர்த்தர் அவரிடம் உன் வீட்டிற்கு வந்துபோன மணமகன் அவன் இந்த கோணிப்பையைப் போல தாழ்மையுள்ளவன் எழுதப்பட்ட அந்த காகிதம் என்னால் நற்சாட்சி பெற்றவன் அவனே உன் மகளுக்காக நான் ஏற்படுத்தின மணவாளன் என்று தெரியப்படுத்தினார். இன்றைக்கு அவர்கள் குடும்பமாக சந்தோஷமாக இருக்கிறார்கள்.

*ஆண்டவருக்காக காத்திருக்கும்போது அவர் மிகப்பெரிய ஆசீர்வாதத்தை உங்கள் வாழ்க்கையில் கொண்டு வருவார். ஆண்டவர் எப்பொழுதும் ஒரு குடும்பத்திற்குள்ளே விரும்புவது என்ன? ஆண்டவரை தலைவராக வைக்க வேண்டும் என்பதே அவரின் விருப்பம். ஆண்டவர் தலைவராக இருப்பாரானால் அவரிடத்தில் கேட்டுத்தான் எந்த செயலையும் செய்ய வேண்டும். எந்த குடும்பத்திலெல்லாம் இயேசு தலைவராக இருக்கிறாரோ எந்த குடும்பத்திலெல்லாம் இயேசுவினிடத்தில் விசாரிக்காமல் இயேசு சொல்லாமல் நான் அதை செய்யவே மாட்டேன் என்று காத்திருக்கிறார்களோ அங்கே ஆண்டவர் இறங்கி வருகிறார். ஆண்டவருக்காக நாம் காத்திருப்பதை அவர்*

*பார்க்கும் போது அவருடைய உள்ளம் நமக்காக மனதுருக்கம் கொள்கிறது. அவர் நமக்கு நேராக இறங்கி வருகிறார். அதே சமயம் கர்த்தருக்கு காத்திருக்காதவர்களின் நிலை என்ன? கர்த்தருக்குக் காத்திருக்காமல் கர்த்தரிடத்தில் விசாரிக்காமல் நாம் செய்கிற செயல்கள் சரியாக இருக்காது.*

**முதலூரில் அமைந்திருக்கும் எழுப்புதல்கூடாரத்தின்பிரதிஷ்டையின் போது மதிப்பிற்குரிய தேவமனிதர் வின்சென்ட் செல்வக்குமார் அண்ணன் வந்திருந்தார்கள். அந்த நாள் ஊழியத்தை முடித்து நானும் அண்ணனும் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அப்பொழுது அவர் குவாலிஸ் காரில் வந்திருந்தார். அவர் ஊழியத்திற்காக வந்து இருபத்தாறு ஆண்டுகளுக்குப் பின்பு, தேவன் அவர் ஜெபத்தைக் கேட்டு புதிய காரைக் கொடுத்ததாகவும் அதுவரை அவர் பொறுமையோடு காத்திருந்து தான் பெற்றுக்கொண்ட அனுபவத்தை என்னோடு பகிர்ந்துகொண்டார்கள். அற்ப கார் தானே அதை லோன் மூலம் வாங்கலாமே, என்று அவர் செயல்படாமல் கர்த்தர் கொடுக்கும்வரை காத்திருந்தார். அந்தக் காரில் முதலாவது ஊழியத்திற்கென்று முதலூருக்குதான் வந்திருந்தார்.**

*இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தும்படியாக அவர்களுக்கு முதன்முதலில் ராஜாவாக தேவன் ஏற்படுத்தின சவுலின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை பார்க்கும்பொழுது* ***அவன் தனக்குச் சாமுவேல் குறித்த காலத்தின்படி ஏழுநாள்மட்டும் காத்திருந்தான்; சாமுவேல் கில்காலுக்கு வரவில்லை, ஜனங்கள் அவனை விட்டுச் சிதறிப்போனார்கள்.***

***அப்பொழுது சவுல்: சர்வாங்கதகனபலியையும் சமாதானபலியையும் என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்று சொல்லி, சர்வாங்கதகனபலியைச் செலுத்தினான்.***

***அவன் சர்வாங்க தகனபலியிட்டு முடிகிறபோது, இதோ, சாமுவேல் வந்தான்; சவுல் அவனைச் சந்தித்து வந்தனஞ்செய்ய அவனுக்கு எதிர்கொண்டு போனான்.***

***நீர் செய்தது என்ன என்று சாமுவேல் கேட்டதற்கு, சவுல்: ஜனங்கள் என்னை விட்டுச் சிதறிப்போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர்வராததையும், பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிவந்திருக்கிறதையும், நான் கண்டபடியினாலே, கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் வந்துவிடுவார்கள் என்றும், நான் இன்னும் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணவில்லை என்றும், எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன் என்றான்.***

*சாமுவேல் சவுலைப் பார்த்து:* ***புத்தியீனமாய்ச் செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்; மற்றபடி கர்த்தர் இஸ்ரவேலின் மேல் உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவார்.***

***இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார் – 1 சாமுவேல் 13:8–14***

*ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் ஆசாரிப்புக் கூடாரத்தை வனாந்தரத்தில் ஏற்படுத்தினார். அந்த ஆசாரிப்பு கூடாரத்தின் மாதிரியின்படியே ஜனங்கள் இஸ்ரவேலில் கானானிலே குடிவந்த போது அவர்கள் ஜெப ஆலயத்தை உருவாக்கினார்கள். அதுவே அந்த*

*நாளில் தேவாலயமாய் இருந்தது. ஆசரிப்பு கூடாரத்தின் மாதிரியாக அதை கட்டினார்கள். அங்கே தேவன் ஆரோனுடைய வழியாக ஆசாரிய வகுப்பை உண்டாக்கி தலைமுறை தலைமுறையாக தேவ கட்டளையின்படியே ஆசாரியர்கள் ஜனங்களின் பாவத்திற்காய் பலி செலுத்தும்படியாக தேவனால் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் ஆசாரியன் செய்யக் கூடிய வேலை கர்த்தருடைய ஊழியக்காரன் செய்யக் கூடிய வேலையை சவுல் ராஜா துணிகரங்கொண்டு சர்வாங்க தகனபலியை செலுத்தினதினால் கர்த்தருடைய கோபம் ராஜா மீது வந்தது. அதினால் அவனுடைய ராஜ்ய பாரம் முடிவுக்கு வந்தது. அவன் மரித்து போனான். அவன் ஆத்துமா நித்தியத்தை சந்திக்கவில்லை. அவன் தற்கொலை செய்து கொண்டான். யுத்தத்திலே காயமடைந்து ஈட்டியை நட்டு அதின்மேல் விழுந்து அவன் மரித்தான். அவனுடைய ஓட்டம் தவறாய் முடிந்தது. காத்திருக்க தவறியதினால் தேவன் அவனுக்கு கொடுத்த வாழ்நாட்களை முடிவுக்கு கொண்டு வந்து விட்டார்.*

**ஒரு அருமையான கர்த்தருடைய ஊழியக்காரர் என்னோடு அலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அவருக்கு ஐ.டி கம்பெனிகள் மூன்று இருக்கக்கூடிய இடத்திற்கு அருகாமையில் கர்த்தர் நல்ல திருச்சபையைக் கொடுத்தார். அதில் எழுநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தேவனை ஆராதித்தார்கள். நாளுக்கு நாள் ஜனங்களுடைய எண்ணிக்கை பெருக ஆரம்பித்தது. அந்த ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். ஜனங்களுடைய எண்ணிக்கை பெருக ஆரம்பித்த போது கமிட்டியினர் கூடி ஆலோசனை செய்தார்கள். ஆலயத்தை விரிவாக்க வேண்டுமென்று தீர்மானித்து அவருடைய திருச்சபைக்கு வரக் கூடிய கட்டிட நிபுணர்கள் சிலரை அழைத்து அவர்களோடு ஆலோசித்து ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான மாதிரி படங்களைக் கொண்டு வர அதிலே ஒரு நேர்த்தியான வரைபடத்தை தெரிந்து கொண்டு இந்தவிதமாக ஆலயத்தைக் கட்ட வேண்டுமென்று தீர்மானித்து அந்த ஆலயத்தைக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டார். அந்த ஆலயத்தைக் கட்ட கிட்டத்தட்ட மூன்றுகோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும். அவர் வங்கியில் போய் மேலாளரை சந்தித்த போது உங்கள் கணக்கில் அதிக பண வரவு இருப்பதினால் மூன்று கோடி ரூபாய் நாங்கள் கடன் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அவர் அந்த பணத்தை வாங்கி கட்டிட வேலையைத் துவங்கினார். மிகவும் மகிழ்ச்சியாய் அந்தவேலைகள் நடந்தது. ஆலயத்தின் மேல் பகுதி வேலை நடந்த சமயத்தில் ஐ.டி கம்பெனிகள் ஒவ்வொன்றாக பொருளாதார நெருக்கடியினால் மூடப்பட்ட போது ஐ.டி கம்பெனியில் வேலை பார்த்தவர்கள் அவருடைய திருச்சபையின் உறுப்பினர்கள் மற்றும் விசுவாசிகளாய் இருந்தவர்கள் இடமாற்றமாகி அடுத்த ஊர்களுக்கு போக ஆரம்பித்தார்கள். அவர்களுடைய தசம பாக காணிக்கையைக் கருத்தில் கொண்டு கடன் வாங்கின போதகருடைய முடிவு பரிதவிக்கப்படத்தக்க நிலையில் இருந்தது. நல்ல காணிக்கை கொடுக்கிறவர்கள் எல்லாரும் படிப்படியாக நான்கு மாதத்திற்குள்ளாக இடமாற்றமானார்கள். ஆலயத்திலே ஆட்கள் குறைய ஆரம்பித்தனர். காணிக்கை வரவு குறைந்து விட்டது. கடன் பாரம் நெருக்க ஆரம்பித்தது. காணிக்கை வரவை திட்டம் பண்ணி தேவனிடத்தில் விசாரிக்காமல் அந்த பெரிய திட்டத்தை செய்ய அந்த போதகர் துணிகரம் கொண்டு அந்த**

**ஆலய வேலை முடியாமல் கடனையும் கட்ட முடியாமல் கடன்காரர்களுக்கு பயந்து அவர் ஒளிய ஆரம்பித்தார். அந்த சமயத்தில் ஒருநாள் அவருடைய மனைவி தனது பிள்ளைகளோடு அவருடைய அம்மா வீட்டிற்கு சென்ற போது இவர் தனிமையாய்இருந்தார். அந்த சூழ்நிலையில் அந்த இடம் எல்லாவற்றையும் விற்று நாம் கடனுக்கு கொடுத்தால் கூட கடனை அடைக்க முடியாது. இனி நாம் ஏன் இந்த உலகத்தில் உயிரோடு இருக்க வேண்டாமென்று விஷமருந்தை வாங்கிக் கொண்டு தற்கொலை செய்ய தீர்மானித்து கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் போது தான் அவருடைய வீட்டிற்குள் நம்முடைய எழுப்புதல் தொனி பத்திரிக்கை போய் சேர்ந்திருக்கிறது. அந்த பத்திரிக்கையை எடுத்து படித்த போது அவரின் உள்ளம் தொடப்பட்டு எப்படியாகிலும் என்னோடு தொடர்பு கொண்டு பேச வேண்டுமென்று நினைத்து பல விதத்தில் முயற்சி செய்து என்னிடத்தில் பேசினார். அவரோடு கூட சில காரியங்களை பகிர்ந்து கொண்டு ஆலோசனை கொடுத்து நான் அவருக்காக ஜெபம் செய்தேன்.**

***மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப் போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான். கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான் – எரேமியா 17:5–7***

*ஆகவே கர்த்தருடைய பிள்ளைகளே தேவனிடத்தில் விசாரிக்காமல் எந்தவொரு காரியத்தையும் நீங்கள் செய்யக் கூடாது. உங்கள் குடும்பமானாலும் வியாபார ஸ்தலமானாலும் ஊழியமானாலும் அதிலே ஆண்டவர் தான் தலைவராய் இருப்பேன் என்று அவர் விருப்பமுள்ளவராய் இருக்கிறார். அவரை தலைவராக வைத்து எல்லாவற்றையும் அவரிடத்தில் விசாரித்து கேட்டு கேட்டு நீங்கள் செய்யும் போது உங்கள் ஊழியமானாலும் குடும்பமானாலும் அது ஆசீர்வாதமாய் இருக்கும்.*

*பிரியமானவர்களே, தேவன் நோவாவுக்கு கொடுத்த பேழையின் மாதிரி, மோசேக்கு கொடுத்த ஆசரிப்புக் கூடாரத்தின் மாதிரி இவற்றையெல்லாம் நீங்கள் பார்க்கும் போது இத்தனை முழம் நீளம், இத்தனை முழம் அகலம், இத்தனை முழம் உயரம் இருக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுத்தார். ஏன் ஒரு முழம் அதிகமாக போனால்தான் என்ன? ஏன்? எதற்காக? இப்படி இருக்க வேண்டுமென்று ஆண்டவர் சொன்னார். ஆசரிப்பு கூடாரத்தை தேவன் மோசேக்கு கொடுக்கும் போது வேதாகமத்திலே நாம் வாசிக்கும் போது அது கடினமாக இருக்கும். இத்தனை கொக்கிகள் இத்தனை பணிமூட்டுகள் இத்தனை தொங்கு திரைகள் இத்தனை காதுகள் வைத்திருக்க வேண்டும் இன்னவிதமாக தைக்க வேண்டுமென்று சொல்லுகிறார். எதற்காக, தேவன் இதை சொல்லுகிறாரென்றால் மனிதனை சோதித்தறிவதற்காக இதை செய்கிறார். என் வார்த்தையின்படி இதை செய்கிறானா இல்லையா என்பதை தேவன் அறியும்படியாக ஒவ்வொரு காரியத்தையும் உங்களிடத்தில் கொண்டு வருகிறார்.*

*அதையெல்லாம் சொல்லிவிட்டு மனிதன் நான் சொன்னபடி செய்கிறானா இல்லையா என்பதை அவர் உற்றுப் பார்க்கிறார். ஆண்டவர் நம்மேல் கொண்ட நினைவுகளின்படி தம்முடைய மனவிருப்பத்தை நம்மிடம் சொல்லுகிறார். நம்முடைய புத்திக்கு எட்டாத புதிய புதிய காரியங்களை மேன்மைகளை நன்மைகளை தேவன் நமக்காக தம்முடைய இருதயத்திலே வைத்துக் கொண்டு காத்துக்கொண்டிருக்கிறார்.*

*பிரியமானவர்களே, நான் இவ்வளவு பெரிய ஊழியத்தை செய்வேன் என்பது எனக்குத் தெரியாது. ஊழியத்திற்கு வந்தபோது துண்டுபிரதிகளை எடுத்துக்கொண்டு கிராமம் கிராமமாக நடந்து திரிவேன். அந்த நாட்களில் ஆண்டவர் கொடுத்த தரிசனத்தை, வாக்குத்தத்தத்தை இந்நாட்களில் நிறைவேற்றுவதை நான் கண்கூடாக காண்கிறேன். அதைப் போலத்தான் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஆண்டவர் பெரிய பெரிய திட்டத்தை வைத்திருக்கிறார். கர்த்தருடைய சமூகத்தில் நாம் காத்திருக்க வேண்டும். காத்திருப்பது என்பது நமக்கு மிகவும் கடினம். காத்திருக்க நாம் தவறும்போதுதான் அநேக இடர்பாடுகள் நம்முடைய வாழ்க்கையில் வருகிறது.*

**ஒடிசா மாநிலத்திலே, குறிப்பிட்ட ஸ்தாபனத்தை சார்ந்த ஒரு சில மிஷனெரிகள் ஒரு பட்டணத்திலிருந்து மற்றொரு பட்டணத்திற்கு மலைப்பாதை வழியாக பிரயாணம் செய்த போது அவர்களை வழிநடத்த கூடிய தலைமை பொறுப்பில் இருக்கும் ஊழியர் பின்னால் சில உடன் ஊழியர்கள் சென்றார்கள். எல்லாரும் இருசக்கர வாகனத்தில் கர்த்தருடைய ஊழியத்தை முடித்துவிட்டு அவர்கள் திரும்பி வரும் போது நடு வழியில் அந்த மலைப்பாங்கான பகுதியில் நல்ல மழை பெய்தததினால் காட்டாற்று வெள்ளம் அந்த பள்ளத்தாக்கு வழியாக அதிக நேரம் சென்று கொண்டிருந்தது. அந்த தண்ணீரானது சிறிது நேரம் காத்திருந்தால் வடிந்துவிடும். நாம் பின்பு தாராளமாக செல்லலாம் என்று மற்ற ஊழியர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எல்லா ஊழியர்களும் அங்கே காத்துக்கொண்டிருக்க தலைமை பொறுப்பில் இருக்கக் கூடிய அந்த ஊழியர் பொறுமையை இழந்தார். இந்த தண்ணீர் எம்மாத்திரம் என்று நினைத்து இருசக்கர வாகனத்தில் வேகமாக போன போது தண்ணீரில் விழுந்து காட்டாற்று வெள்ளம் அடித்துச் சென்றது. அவரோ காணாமல் போய் விட்டார். அங்கிருந்து பல கிலோமீட்டர் தள்ளி அவருடைய சடலத்தை நம்முடைய சகோதரர்கள் சேர்ந்து தூக்கி வந்தார்கள். ஒரு மனிதன் காத்திருக்க தவறும்போது அந்த மனிதனுடைய ஓட்டமே நின்றுவிடுகிறது. இன்று, அவருடைய மனைவியும், இரண்டு பிள்ளைகளும் கண்ணீரோடு காணப்படுகிறார்கள். அவர் மறுபடியும் திரும்பி வரமுடியுமா?**

*பிரியமானவர்களே, இயேசு தாம் ஊழியம் செய்த நாட்களில் பிதாவினிடத்தில் கேள்விப்பட்டதை அல்லது பிதா சொன்னதையே செய்தார். தாம் சுயமாக எதையும் செய்யவில்லையென்று அவரே சொல்லியிருக்கிறார். பிதாவின் வேளை வரும்வரைக்கும் இயேசு காத்துக் கொண்டிருந்ததாக வேதத்திலே வாசிக்கிறோம். இயேசு முதலாவது அற்புதத்தை கானாவூரிலே செய்தார். அதைக் குறித்து சுருக்கமாக தியானிப்போம்.* ***மூன்றாம்நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள். இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். திராட்சரசங்குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி:***

***அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார் – யோவான் 2:1–4.*** இங்கே நாம் ஒரு இரகசியத்தை பார்க்க முடியும். இயேசுவின் தாயாகிய மரியாள் இயேசு பிறந்தநாள் முதற்கொண்டு ஜெபம்பண்ணினதை பார்த்திருக்கக் கூடும். தேவாயத்திலே பிரசங்கம் பண்ணினதை பார்த்திருக்க முடியும். ஆனால் இயேசு அற்புதம் செய்ததை மரியாள் அந்நாள் வரைக்கும் ஒருபோதும் பார்த்ததில்லை. ஏனென்றால் இயேசு கானாவூர் கல்யாண வீட்டில்தான் முதலாவது அற்புதத்தைச் செய்தார். இப்படியிருக்க திருமண வீட்டிலே இயேசுவும் அவருடைய சீஷர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். இயேசுவின் தாயாகிய மரியாளும் அழைக்கப்பட்டிருந்தாள். அந்த நாட்களில் யூதேயா தேசத்திலே திருமண வீட்டில் நடைபெறும் விருந்துஉபச்சாரத்தில்திராட்சைரசம் முக்கிய பங்காய் இருந்தது. இப்படியிருக்க கானாவூர் கல்யாண வீட்டில் ரசம் குறைவுபட்ட போது, இயேசுவின் தாயாகிய மரியாள் இயேசுவை நோக்கி பந்தியிலே திராட்சைரசம் இல்லை என்றாள். அவரோ ஸ்திரீயே உனக்கும் எனக்கும் என்ன என் வேளை இன்னும் வரவில்லை என்றார். இங்கே இயேசுவுக்கும் மரியாளுக்கும் நடந்த உரையாடலிலே நாம் அறிந்த கொள்ளக்கூடிய ரகசியம் என்னவென்றால் இயேசு கானாவூர் கல்யாண வீட்டிலே தண்ணீரை ரசமாக மாற்ற வேண்டுமென்பது பிதாவின் சித்தமாயிருந்தது. அதை அந்த நாள் காலையிலே பிதாவினால் இயேசுவுக்கு வெளிப்படுத்தப்பட்டதை தன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு அவர் தன் நாவினால் பிதாவை புகழ்ந்த போது சாத்தான் அதை அறிந்து கொள்கிறான். ஆகவே சாத்தான் பிதாவினுடைய வேளை வருமுன்னே இயேசுவை சுயமாக அற்புதம் செய்ய வேண்டுமென்று மரியாள் மூலமாய் தூண்டுவதை பார்க்கிறோம். அதை ஆவியிலே அறிந்து கொண்ட இயேசு தன் தாயார் மூலமாக சாத்தான் செயல்படுவதை அறிந்து கொண்டு சாத்தானை கடிந்து கொள்ளும்விதமாக ஸ்திரீயே உனக்கும் எனக்கும் என்ன? என் வேளைஇன்றும்வரவில்லைஎன்றார். இயேசு பிதாவின் வேளைக்காக காத்திருக்காமல் சுயமாக தண்ணீரை ரசமாக மாற்ற முயற்சித்தால் அற்புதம் நடந்திருக்காது. இயேசுவுடைய ஊழியத்திலே வெட்கம் உண்டாயிருக்கும். அதுமாத்திரமல்ல, கல்யாண வீட்டார் ரசம் குறைவுபட்டதை கண்டு இந்த இக்கட்டான சூழ்நிலையில் வந்திருக்கிற விருந்தாளிகளுக்கு திராட்சைரசம் பரிமாற முடியவில்லையே என்று தேவனை நோக்கி அபயமிடும் போது, பிதா இயேசுவை தூண்டி அற்புதம் செய்வதே நியாயமானது.

நாம் மாம்சதேகத்தில் குடியிருப்பதினால் இவ்வுலகத்திலே அநேக தேவைகளுக்காக நெருக்கப்படுகிறோம். எப்பொழுதெல்லாம் இவ்வுலகத்தில் நமக்கு தேவைகள் வருகிறதோ அப்போதெல்லாம் சாத்தான் குறுக்கு வழியிலே அதை கொடுத்து நம்மை பாவம் செய்ய வைக்கிறான். நீங்கள் தேவனிடத்தில் பெற்றுக் கொள்ள பொறுமையாய் காத்திருக்கும் போது தேவன் உங்களுக்கென்று தம்முடைய இருதயத்தில் தீர்மானித்த ஆசீர்வாதங்களை ஏற்ற வேளையிலே தந்தருளுவார்.

மோசே தேவனுடைய அழைப்பிற்கிணங்கி தான் வழிநடத்தி வந்த ஜனங்களை கானான்

கொண்டுபோய் சேர்க்கும்படியாக தேவ சமூகத்தில் புசியாமலும் குடியாமலும் நாற்பது நாட்கள் உபவாசித்து காத்திருந்தான். அநேக திட்டங்களை தேவன் அவனுக்கு கொடுத்தார். உடன்படிக்கை கற்பலகையை தேவன் அவன் கையில் கொடுத்தார். அவன் மலையை விட்டு இறங்கு முன்னே நாற்பது நாளில் ஜனங்கள் பொறுமையை இழந்து எத்தனை நாள் தான் நாங்கள் அவருக்காக காத்துக்கொண்டிருப்பது என்று முறுமுறுத்தார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் ஆரோனிடத்தில் போய் போராடி மோசேக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. எங்களுக்கு நம்பிக்கையில்லை.

அவர் வருவாரா இல்லையா அல்லது மலையோடு அவர் வாழ்க்கை முடிந்து விட்டதா என்பது தெரியவில்லை. அதனால் எங்களை வழி நடத்த யாருமில்லை. எங்களை வழி நடத்திக் கொண்டு போகும் தெய்வம் யார் என்பது எங்களுக்கு தெரிய வேண்டுமென்று ஆரோனிடம் கேட்டார்கள். எந்த மனிதன் எங்களை நடத்துவான் என்று கேட்டால் ஆரோன் நான் நடத்துவேன் என்று தைரியமாக சொல்லியிருப்பான். எங்களை வழி நடத்தக் கூடிய தெய்வம் யார் என்று கேட்டவுடனே முரட்டாட்டம் பிடித்த ஜனங்களுக்கு ஆரோன் பயந்து உங்கள் காதுகள் கழுத்தில் இருக்கும் பொன் பொருட்களை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்று சொல்லி நெருப்பில் போட்டு கன்றுகுட்டியை உருவாக்கி இது தான் உங்களை எகிப்திலிருந்து அழைத்து கொண்டு வந்தது என்று சொல்லி அதற்கு முன்பாக பலி செலுத்தி நடனமாடினார்கள். மோசேயிடம் ஆண்டவர் சொல்லுகிறார் ***நீ இறங்கிப்போ: எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள் – யாத்.32:7,8*** அவர்களை அழித்துப் போடும்படியாய் எழும்பிய ஆண்டவருடைய கோபத்தை ஆற்றும்படியாய் அவரை ஆறுதல்படுத்தும்படியாக மோசே வைராக்கியங் கொண்டு, கன்றுக்குட்டி உருவாக காரணமாக இருந்த மூவாயிரம் பேரை பட்டயக்கருக்கினால் வெட்டிப்போட்டான். கானானுக்கு போகும்படியாக அழைக்கப்பட்டவர்கள் காத்திருக்க இயலாமல் போனதினால் மலையின் கீழே மூவாயிரம் பேர் செத்து மடிந்தார்கள்.

கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. சில பிள்ளைகள் பெற்றோரிடத்தில் சில கோரிக்கைகளை வைப்பார்கள். அடுத்த வாரம் வாங்கி தருகிறேன் என்றால் முடியாது என்பார்கள். இரண்டு நாட்கள் கழித்து வாங்கி தருகிறேன் என்றாலும் முடியாது என்பார்கள். உடனடியாக கொடுக்க வேண்டுமென்று அடம்பிடிப்பார்கள். காத்திருக்க முடியாமல் எல்லாம் உடனே நடக்க வேண்டுமென்று நினைப்பார்கள். இதெல்லாம் குழந்தை பருவத்து நிகழ்வுகள். ஆனால் ஆவிக்குரிய வாழ்க்கையில் நமக்கு ஒரு நிதானம் வேண்டும். ஒரு முதிர்ச்சியான அனுபவம் வேண்டும். இவை நம் வாழ்க்கையில் இருக்க வேண்டும். நாம் எல்லாவற்றிற்காகவும் கர்த்தருடைய சமூகத்தில் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். ஆகவே கர்த்தருக்காக காத்திருப்போம். தேவன் தருகின்ற பரிபூரண ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.



# பணித்தளச் செய்திகள்

## ஒடிசா மாநிலம்

### நபரங்பூர் மாவட்டம் உமர்கோட் பணித்தளம்

**லொகரகுடா:**

- இக்கிராமத்தில் ஞாயிறு ஆராதனை நடைபெறுகிறது. 22 பேர் கலந்து கொள்கின்றனர்.
- ஜெயமணி என்ற சகோதரியினுடைய நிலப் பிரச்சனை சமாதானமான முறையில் முடிவு பெற ஜெபியுங்கள்.
- ஹரிபந்து என்பவர் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஜெபத்திற்கு வருகிறார். இவர் ஜாதி பாகுபாடு பார்க்கிறார். எனவே இவருக்காக ஜெபியுங்கள்.
- லொகரகுடா விசுவாசிகள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர ஜெபியுங்கள். இக்கிராமத்திற்கு ஒரு ஆலயம் தேவைப்படுகிறது. இதற்காக ஜெபியுங்கள்.
- நுவாகுடா கிராமத்தில் புதிதாக ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெறுகிறது. பதுமணி ஹரிஜன் என்ற விதவை தாயார் மற்றும் 4 பிள்ளைகள், டிக்கோ சுனானி மற்றும் அவரின் 3 பிள்ளைகள், சுத்து சுனானி குடும்பத்தினர்கள் மற்றும் துத்திகா என்ற சகோதரியும் ஆராதனைக்கு வருகின்றனர்.
- டிக்கோ சுனானி என்ற சகோதரி மது பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள். இவர்களது வீட்டிலிருந்த பூஜை செய்யக்கூடிய படங்கள் அனைத்தும் எடுத்து நதியில் போட்டுவிட்டோம். மீண்டும் இந்த அசுத்த ஆவியினுடைய கிரியைகள் இவர்கள் குடும்பத்திற்குள் வராதிருக்க ஜெபியுங்கள்.

### சுவிசேஷ ஊழியம்:

- குர்ஸி, மால்பரா, ஜான்டோரி, கும்டாகுடா, நதிபாரா, உஜ்ஜானி பரா, செம்மல்தொரா, கடாகட், பலு டொங்கிரி, பொன்யாகட்டா, தொலாரி போன்ற கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம்.

**பொடகுமாரி பஞ்சாயத்து:**

- பொடகுமாரி, குட்டுகுடா, ஹண்டா, கொர்டியாகுடா, சன்குமாரி, செமிலிபதரா, சொணாபதரா, கஞ்சாணபெடா, மால்பெடா, மால்குடா போன்ற பஞ்சாயத்துகளில் சுவிசேஷம் அறிவித்தோம்.

**செம்லா பஞ்சாயத்து:**

- பத்திலிகுடா, பொட்டுகுடா,

செம்லா, மெண்டாபெடா, பொடபாசிணி, சன்னுபாசிணி, முன்னாகுடா, ஆதிவாசி போன்ற பஞ்சாயத்துகளில் சுவிசேஷம் அறிவித்தோம்.

**சிக்கல்பதர் பஞ்சாயத்து:**

- சிக்கல்பதர், பூஜாரிபரண்டி, அதிகாரிகுடா, கொச்சினியாம், மிட்டுகுடா, சொட்டாகுடா, நங்காகுடா, சொக்குருபெடா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து கைப்பிரதிகள் கொடுத்தோம். இக்கிராம ஜனங்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## கோராபுட் மாவட்டம் நந்தப்பூர் பணித்தளம்

**கிர்லிகுடா:**

- இங்கு ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெற்று வருகிறது.
- ஜியோஸ்னா (வயது–4) என்ற சிறுமி கடந்த வாரம் மரித்து விட்டாள். எனவே இவளது தாய் தகப்பன் மிகவும் துக்கமாக உள்ளார்கள். கர்த்தர் இந்த குடும்பத்திற்கு ஆறுதலளிக்க ஜெபியுங்கள்.
- ஹெனாலி கிலோ, தொமாஸ் கிலோ, ரிங்கி ஹந்தால் ஆகியோர் வயிற்றோட்டத்தினால் கஷ்டப்படுகின்றனர். கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- மாற்கோ சிந்தேரி என்ற சகோதரன் வேதம் வாசிக்கும் போதும், ஜெபிக்கும் போதும் அதிகமாக தூக்கம் வருகிறது என்று கூறுகிறார். இவருக்காக ஜெபியுங்கள்.
- ஆசா ஹந்தால் என்ற சகோதரியின் உடன்பிறந்த சகோதரன் மரித்துவிட்டார். இவர்கள் குடும்பத்திற்கு கர்த்தர் ஆறுதலளிக்க ஜெபியுங்கள்.
- அனித்தா கிலோ என்ற சிறுமி (வயது–8) தலையில் அதிகமாக பொடுகு உள்ளது. தலைமுடி முழுவதும் வெள்ளையாக மாறியுள்ளது. மேலும் அதிகமாக முடி உதிர்கிறது. கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- சாரா கோரா என்ற சகோதரி கடந்த இரண்டு மாதங்களாக தீராததலைவலி,உடல்வலியினால் கஷ்டப்படுகிறார். கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- லக்கி சிந்தேரி, சம்பா ஹந்தால், ஜிம்பே ஹந்தால் இவர்கள் பின்மாற்றமாகி குடிபழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ளனர். கர்த்தர் விடுதலை கொடுக்கவும், மீண்டும் பாவ உணர்வடைந்து கர்த்தருக்குள் வரவும் ஜெபியுங்கள்.
- கொண்டாகுடா கிராமத்தில் மிந்து கிலோ என்ற சகோதரிக்கு கடந்த இரண்டு வருடமாக இடது கை அதிகமாக வலிக்கிறது. கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- அனி கிலோ என்ற மகள் வயிற்றுவலியினால் மிகவும் கஷ்டப்படுகிறாள். கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- மொரியம் கிலோ என்பவருக்கு தலைவலியிலிருந்து கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- கிர்லிகுடா கிராமத்தில் சிக்குனு ஹந்தால், புட்கி கோரா, கம்மி ஹந்தால், தெவீடு கிலோ, ராம்போ கிலோ, சஞ்சய் கிலோ,

திலோ கிலோ, சுமந்த் ஹந்தால், உஸ்மியா ஹந்தால், மங்கு ஹந்தால், ருபாய் சிந்தேரி, குத்துலி ஹந்தால், ரஸ்மிதா ஹந்தால், சிலோ ஹந்தால், கொசாய் ஹந்தால் இந்த 19 பேர் கடந்த மாதம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். இவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவும், விசுவாசத்தில் பெலப்படவும் ஜெபியுங்கள்.

## சுவிசேஷ ஊழியம்:

### பத்ந்லூம் பஞ்சாயத்து (நந்தப்பூர் பிளாக்)

- மாலிபுட், ரத்துன்புட், பாராய், ஹாட்குடா, தொட்டாகுடா, ஜெயந்த்கிரி, பிரதானிபுட், பாமர்புட், தொம்பாதொட்டா, சொம்பாபுட், புஸ்ஸிபுட், கோடிபுட், சிந்தால்புட், டங்கேல், சுடுக், சரியாபல்லி, பங்கிபுட் ஆகிய கிராமங்களில் இயேசுவைப் பற்றி அறிவித்து கைப்பிரதிகள் கொடுத்தோம். இக்கிராம மக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## நபரங்கபூர் மாவட்டம் புர்ஜா பணித்தளம்

### புர்ஜா:

- இக்கிராமத்தில் ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெறுகிறது. ஹேமந்த்மாஜி, நபினோ ஹரிஜன், எல்லா கொச்சிம் ஆகிய மூன்று பேரும் ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக உள்ளனர். இவர்களுக்காக ஜெபியுங்கள்.
- சொபிலால் நாக் என்ற தகப்பனாருக்கு கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஆயுசு நாட்களை கூட்டிக் கொடுத்தார். இவருக்காக ஜெபியுங்கள்.
- பண்டுக்காக என்பவருக்கு சுவிசேஷம் அறிவித்தேன். இவர் ஒரு பலசரக்கு கடை வைத்திருக்கிறார். இவருக்கு வியாபாரம் நன்றாய் நடக்கும்படி ஜெபிக்க கேட்டுக் கொண்டார். இவர் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- இக்கிராமத்திலுள்ள புறஜாதி மக்கள் இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வரும்படி ஜெபியுங்கள்.
- சப்பீர் என்ற சிறுவனுக்கு (வயது–5) கர்த்தருடைய பாதுகாப்பு இருக்கும்படியாகவும், கர்த்தர் ஞானத்தை கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

### இந்திராகாலணி:

- இங்கு ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெறுகிறது.
- ரபிந்தர் பொகல் என்ற ஆசிரியர். சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பேசுகிறார். இவர் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

### கொர்லாடொங்கிரி:

- இக்கிராமத்தில் இரண்டு குடும்பம் ஆராதனைக்கு வருகின்றனர். காசிராம் பொர்ஜா, மொத்திலால் பொர்ஜா இவர்கள் புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள். இவர்கள் சில நேரங்களில் ஞாயிறு ஆராதனையை மறந்துவிட்டு எங்கையாவது போய் விடுகிறார்கள். இவர்களுக்காக ஜெபியுங்கள்.
- மேலும் இக்கிராம மக்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவை ஆராதிக்க வரும்படி ஜெபியுங்கள்.

## சுவிசேஷ ஊழியம்:

- பொடகும்மாரி, குட்டுகுடா, கண்டா, கொரிண்டியா குடா, சன்கும்மாரி, செமிலிபொத்ரா, சொன்னா பொத்ரா, சஞ் சான்பெடா, மால்பெடா, மால்குடா போன்ற கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து கைப்பிரதிகள் கொடுத்தோம். இவர்கள் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

**செம்லா:**

- பொக்கொலிகுடா,பொட்டுகுடா, செம்லா, மெண்டாபெடா, பொடொபாசினி, சன்பாசினி, சிவுனாகுடா, ஆதிவாசி போன்ற கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து கைப்பிரதிகள் கொடுத்தோம். இவர்கள் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

**சிக்கல்பதர்:**

- சிக்கல்பதர், பூஜாரிபரண்டி, அதிகாரிகுடா, தெத்தினி ஆம், மிட்டுகுடா, சொட்டாகுடா, நங்கா குடா, துப்பர்பெடா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து கைப்பிரதிகள் கொடுத்தோம். இவர்கள் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

## கோராபுட் மாவட்டம் பாவுஸ்குடா பணித்தளம்

**பாவுஸ்குடா:**

- ரஸ்மி என்ற சகோதரிக்கு கால்களில் ஏற்பட்டிருந்த காயம் ஆறுவதற்கு கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!
- ராஜா என்ற சகோதரனுக்கு ஜெபத்தினால் ஓட்டுநர் உரிமம் கிடைக்க கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை.
- மனோஜ் என்ற சகோதரன் ஒரு கடை வைத்துள்ளார். இந்த கடையை விரிவுபடுத்த பணத்தேவை உள்ளது. கர்த்தர் தேவையை சந்திக்கும்படி ஜெபியுங்கள்.
- சஞ்சித் என்ற சிறுவனுக்கு (வயது–14) அடிக்கடி வாந்தி ஏற்படுகிறது. கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள். மேலும் இவன் பான்பராக்கு சாப்பிடும் பழக்கத்தை ஆரம்பித்திருக்கிறான். கர்த்தர் விடுதலை கொடுக்க ஜெபியுங்கள்.
- புன்னம்மா என்ற சகோதரிக்காக அதிகமாக ஜெபித்ததினால் கர்த்தர் வாதநோயிலிருந்து விடுதலை கொடுத்தார். இப்போது மார்க்கெட்டில் வியாபாரம் செய்து வருகிறார். கர்த்தர் இந்த சகோதரியை ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
- ஜீனஸ் என்ற சிறுவனுக்கு இரத்தசோகை வியாதி உள்ளது. இதனால் அடிக்கடி கால்வலி ஏற்படுகிறது. கர்த்தர் விடுதலை கொடுக்க ஜெபியுங்கள்.
- நாகமணி என்ற சகோதரியினுடைய பிள்ளைகள் சளி காய்ச்சலினால் அதிக நாட்களாக கஷ்டப்படுகின்றனர். கர்த்தர் விடுதலை கொடுக்க ஜெபியுங்கள். மேலும் இந்த சகோதரியினுடைய கணவன் இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வரும்படி ஜெபியுங்கள்.
- ப்ரேமா என்ற சகோதரியினுடைய கணவன் இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வரும்படி ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. இளம் தலைமுறையினரை கடுமையாக பாதிக்கும் ஆன்லைன் விளையாட்டுகளுக்கு முடிவு கட்டாமல் விடப்போவதில்லை என்றும், மாணவர்கள் மைதானங்களையே மறந்துவிட்டார்கள் எனவும் மதுரை ஐகோர்ட்டு தாமாக முன்வந்து பதிவு செய்த வழக்கில் நீதிபதிகள் ஆவேசமாக கருத்து தெரிவித்தனர்.
2. தமிழகத்தை தொடர்ந்து கேரளா, தெலுங்கானா மாநிலங்களும் இந்தி திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதி இருக்கிறார்.
3. சுப்ரீம் கோர்;ட்டு புதிய தலைமை நீதிபதியாக டி.ஒய்.சந்திரசூட் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நவம்பர் 9-ந் தேதி பதவி ஏற்கிறார்.
4. மாணவிகள் ஹிஜாப் அணிவதற்கு தடை விதிக்கப்பட்டதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பு வழங்கினர். இதைத்தொடர்ந்து இவ்வழக்கு கூடுதல் நீதிபதிகள் அமர்வுக்கு மாற்றப்படுகிறது.
5. அமெரிக்காவில் போலீஸ் அதிகாரி உள்பட 5 பேரை சுட்டுக்கொன்ற சிறுவனை போலீசார் கைது செய்தனர்.
6. பாகிஸ்தானில் 2 மணி நேரத்துக்கு ஒரு பெண் வீதம் கற்பழிக்கப்படுவதாக ஆய்வில் அதிர்ச்சி தகவல்கள் கிடைத்துள்ளன.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக
"CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT" என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM, CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**

Branch IFS Code No: **IOBA0000124**

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 81909 25800 |
| ஈரோடு | – 99434 46728 |
| ஓசூர் | – 94869 07831 |
| திருவள்ளூர் | – 94451 49642 |
| பெங்களூரு | – 94869 19522 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 94865 88270 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.




ஓசூர் புது கிருபை இயேசு நம்மோடு சபையில்
நடைபெற்ற மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனையில்
செய்தியளிக்கும் நமது சகோதரர்.

Registered Newspaper RNI No. TNTAM/03/15637
Date of publication on 10.10.2022. Posted at Mudalur P.O., Tuticorin Dist. - 628 702 on 14th and 15th of every month.

முதலூரில்

# எழுப்புதல் உபவாச ஜெபம்



## 05.11.2022

முதல் சனிக்கிழமை

காலை 9 மணி முதல் 2 மணி வரை

எழுப்புதல் ஜெப மையம்,
முதலூர்.

தேவ செய்தி

சகோ.
## T. ஆசீர் ஞானராஜ்

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

If Undelivered Please return to

**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 96294 99532**

To,